IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.
OS No. 32/2021

**28.08.2023 – வா.சா.1 திருமதி. உண்ணாமலை** சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

( வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ) புல எண் 89/1ஏ–வில் 10 செண்ட் நிலத்தை கமலகண்ணன் மற்றும் சுந்தரமூர்த்தி மகன்கள் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். மேற்படி புல எண் 89/1 ஏ–வில் கண்டுள்ள 10 செண்ட் நிலம் எனது அப்பாவின் முதல் மனைவி எல்லம்மாவின் அம்மா சின்னம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும் . சின்னம்மாளின் அப்பா மண்ணாங்கட்டி மேற்படி 10 செண்ட் நிலத்தை 02.05.1931ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட சீதனப்பத்திரத்தில் மூலமாக சின்னம்மாளுக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். சின்னம்மாளுக்கு பிறகு அவருடைய மகள் எல்லம்மாளுக்கு சொந்தம் என மேற்சொன்ன சீதனப்பத்திரத்தில் மண்ணாங்கட்டி எழுதி வைத்தார் என்றால் சரிதான் . அந்த எல்லம்மாள் தான் எனது அப்பா மாணிக்கத்தின் முதல் மனைவி என்றால் சரிதான். மேற்சொன்ன 10 செண்ட் நிலத்தை தான் எனது அப்பா மாணிக்கமும், எல்லம்மாளும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான் . எல்லம்மாள் இறப்பிற்கு பிறகு எனது அம்மா அமிர்தம்மாளை எனது அப்பா இரண்டாவதாக திருமணம் செய்தார் என்றால் சரிதான் . மேற்சொன்ன 10 செண்ட் நிலத்தை எனது அப்பா எனது அம்மா அமிர்தம்மாள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பா இறப்பிற்கு பிறகு அந்த சொத்தை நானும் எனது அம்மா அமிர்தம்மாளும் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான் . எனது அம்மா இறப்பதற்கு முன்பு மேற்சொன்ன 10 செண்ட் நிலத்தில் எனக்கும் எனது அம்மாவுக்கும் சம பாதி பாகம் உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் , அந்த சொத்தில் எனக்கும் எனது அம்மாவுக்கும் சம பாதி பாகம் உண்டு என்றால் சரிதான் . புல எண் 89/1ஏ –வில் கண்டுள்ள 10 செண்ட் நிலத்தை வழக்கு தொடுக்கும் போது

சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகனான 1ம் பிரதிவாதி மேற்சொன்ன 10 செண்ட் நிலத்தை இந்த வழக்கில் சேர்க்க சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பும் இதுநாள் வரை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கானது பிழையுடைய வழக்கு என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தான செட்டில்மெண்ட் ( வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ) நான் எனது மகன் வழி பேரன்களுக்கு எழுதி வைத்தேன் என்றால் சரிதான் . வழக்கு தாக்கல் செய்தபிறகு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் மேற்சொன்ன தான செட்டில்மெண்ட் செல்லாது என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் / ஒம்/- P. மதுசூதனன்,

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.